உ

கடவுள் துணை.

மெய்ஞ்ஞானச்செல்வராகிய

சிவவாக்கியரருளிச்செய்த

சிவவாக்கியம்.

இஃது

சரவணபுரம்

சண்முகமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

சென்னை-புரசை

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்கவச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1899.



உ

சிவமயம்.

சிவவாக்கியம்.

தானேதானேதானேதானேதானேதானேதத்துவம்
தானேதானேதத்துவமதானேதானேதத்துவம
தானேதானேதானேதானேதன்னைத்தத்துவமாகுமே

அகாரகாரணத்துளேயனேகனேகரூபமாய்
உகாரகாரணத்துளேயுருத்தரித்துநின்றனன்
மகாரகாரணத்துளேமயங்கிநின்றவையகஞ்
சிகாரகாரணத்துளேதெளிந்ததேசிவாயமே. ௧

அரியதோர்நமசிவாயமாகியந்தமானதும்
ஆறிரண்டுநாலுங்காயுடலுளவிடாதமந்திரம்
தெரியுமாறுமேவுமாறுசாஸ்திரபுராணமுந்
தேடுமாறுமயந்துஞ்சர்வசிவம்தவமேதவமே. ௨

நமசிவாயமைந்தெழுத்துநிற்குகண்ணிலைகளும்
நமசிவாயமைந்திலேகுறிக்குமவ்வெழுத்தையும
நமசிவாயமைந்துபூதநாதமானவாறையும்
நமசிவாயவுண்மையைநமக்குணாசெய்நாதனே. ௩

நவ்விரண்டுகாதலாய்நவின்றமவ்வுவயிறதாய்ச்
சிவ்விரண்டுதோளதாய்ச்சிறந்தவவ்வுவாயதாய்
யவ்விரண்டுகண்ணதாயமர்ந்திருந்தகாரணஞ்
செவ்வியொத்துநின்றதேசிவாயமைந்தெழுத்துமே. ௪

சிவாயமைந்தெழுத்திலேதெளிந்துமுத்திசேரலாம்
சிவாயமைந்தெழுத்திலேதெளிந்துவானமாளலாம்
சிவாயமைந்தெழுத்திலேதெளிந்துஞானஞ்சேரலாம்
சிவாயமைந்தெழுத்தையுந்தெளிந்துபாருமும்முளே. ௫

பரமுனக்கெனக்குவேறுபயமுமில்லைபாவையா
கரமுனக்குநித்தமுங்குவித்திடக்கடமையே
சிரமுருக்கியமுதளித்தசிருவாவுநாதனே
யுரமெனக்குநீயளித்தவுண்மையுண்மையுண்மையே. ௬

அஞ்சுமூன்றுமெட்டதாயனாதியானமந்திரம்
நெஞ்சிலேநினைந்துகொண்டுநாறுருச்செபிப்பிரேல்
பஞ்சமாபாதகங்கணூறுகோடிசெய்யினும்
பஞ்சுபோற்பறக்குமென்றுநான்மறைகள்பண்ணுமே. ௭

சிவாயமென்றவக்ஷரம்சிவனிருக்குமக்ஷரம்
முபாயமென்றுநம்புவோருக்குண்மையானவக்ஷரங்
கபாடமிட்டவாசலைக்கடந்துபோகும்வாயுவை
யுபாயமிட்டழைக்குமேசிவாயமைந்தெழுத்துமே. ௮

நல்லமஞ்சனங்கள்தேடிநாடியோடிமாய்கிறீர்
நல்லமஞ்சனங்களுண்டுநாட்டமாகவும்முளே
வெல்லநன்னெடுத்தநீரோகபூசைசெய்கிறீர்
றில்லைமேவுசிவனுஞ்சிவன்பகத்திலாகுமே. ௯

அறிவிலேபிறந்திருந்தவாகமங்களோதுவீர்
நெறியிலேயிருக்குநேர்மையென்னநேர்மையாச
றுறியிலேதயிரிருக்கவூபுகுந்துவெண்ணெய்தேடு
மறிவிலாதமாந்தரோடுமேனுவாழ்வதெங்ஙனே. ௰

இருக்குநாலுவேதமுமெழுத்தறவேயோதினும்
பொருக்கநீறுபூசினும்பிதற்றினும்பிரானிரா
னுருக்கிநெஞ்சையுட்கலந்துவுண்மைகூடவல்லிரேற்
சுருக்கமற்றசோதியைத்தொடர்ந்துகூடலாகுமே. ௧௧

மூலவட்டமீதிலேமுளைத்தவஞ்செழுத்திலே
கோலவட்டமூன்றுமாய்க்குளிர்ந்தலர்ந்துநின்றதீ
ஞாலவட்டமன்றுளேநவின்றஞானிமேலதா
யேலவட்டமாகியேயிருந்ததேசிவாயமே. ௧௨

அம்பலத்தையம்புகொண்டசங்கென்றசங்குமோ
கம்பமற்றபாற்கடல்கலங்கென்றாற்கலங்குமோ
வின்பமற்றயோகியையிருளும்வந்தணுகுமோ
செம்பொன்னம்பலத்திலேதெளிந்ததேசிவாயமே. ௧௩

கானமுற்றகாட்டகத்தின்வெந்தெழுந்தநீறுபோல்
ஞானமுற்றநெஞ்சகத்தினல்லதொன்றுமில்லையே
யூனகற்றசோதியோடுணர்வுகொண்டடங்கினாற்
றேனகத்திலூறல்போற்றெளிந்ததேசிவாயமே. கச

மனத்தகத்தழுக்கறாதமவுனயோகஞானிகள்
வனத்தகத்திருக்கினுமனத்தகத்தழுக்கறார்
மனத்தகத்தழுக்கறுத்தமவுனயோகஞானிகண்
முலைத்தடத்திருக்கினும்பிறப்பறுத்திருப்பரே. கரு

போசுவனுமீசனேபிரமஞானமும்முளே
யாசையானவைவருமலைந்தலைச்சலம்படுகிறா
ராசையானவைவரையடக்கியோரிடத்திலே
பேசிடாதிருப்பிராகிலீசன்வாதுபேசுமே. கசு

சாமநாலுவேதமுஞ்சகலசாஸ்திரங்களுஞ்
சேமநாலையோதினுஞ்சிவனைநீரறிகிலீர்
காமநோயைவிட்டுநீர்கருத்தொடுங்கவல்லிரே
லூனமற்றநாயமாயிருப்பனெங்களீசனே. கஎ

வடிவுகண்டுகொண்டபெண்ணைமற்றொருவர்நத்தினால்
விடுவனோவனைப்பராருயிரைவெட்டவேணுமென்பனே
நடுவன்வந்தழைத்தபோதுநாறுமிந்தவுடல் |ரே
சுடலைமட்டுங்கொண்டுபோய்த் தோட்டிகைக்கொடுப்ப

இரண்டுமொன்றுமூலமாயியங்குசக்கரத்துளே
சுருண்டுமூலவளையமாய்ச்சுணங்குபோற்கிடந்ததீ
முரண்டெழுந்தசங்கினோசைமூலநாடியூடுபோ
யரங்கபட்டணத்துளேயமர்ந்ததேசிவாயமே. ககூ

விக்கில்லாதசம்பிரதாயமேலுமில்லைகீழுமில்லை
தச்சில்லாதமாளிகைச்சமைந்தவாறதெங்ஙனே
பெற்றதாயைவிற்றடிமைகொள்ளுகின்றபேதைகாள்
சித்தில்லாதபோதுதானசீவனில்லையில்லையே. உ௰

ஆடுகாட்டிவேங்கையையகப்படுத்தும்வாறுபோன்
மாடுகாட்டியென்னைநீமதிமயக்கலாகுமோ
கோடுகாட்டியானையைக்கொன்றகொற்றவா
வீடுகாட்டியென்னைநீவெளிப்படுத்தல்வேண்டுமே. உக

உருத்தரித்தநாடியிலொடுங்குகின்றவாயுவைக்
கருத்தினாலிருத்தியேகபாலமேற்றவல்லிரேல்
விருத்தர்களும்பாலராவர்மேனியுஞ்சிவந்திடும்
அருட்டரித்தநாதனாணையம்மையாணையுண்மையே. உஉ

என்னகத்திலென்னைநானெங்குமோடிநாடினே
னென்னகத்திலென்னையன்றியேதுமொன்றுகண்டிலேன்
மின்னெழும்பிமின்னகத்தின்மின்னொடுங்கும்வாறுபோ
லென்னகத்துளீசனோடியானுமல்லதில்லையே. உங

நாலுவேதமோதுகின்றஞானமொன்றறிவீரோ
நாலுசாமமாகியேகவின்றஞானபோதமா
யாலமுண்டகண்டனும்மயனுமந்தமாலுமாச்
சாலவுன்னிநெஞ்சுளேதெரிந்ததேசிவாயமே. உ௪

மூச்சதாரமூலமாகிமூன்றகாரணபேதமா
யச்சதாரமும்முளேயடங்கலாகியோகமாய்
மெச்சதாரமெய்யுளேவிளங்கிஞானதீபமா
யுச்சரித்தமந்திரம்ஓம்நமசிவாயமே. உ௫

மூலமண்டலத்துளேமுச்சதாரமாகியாய்
நாலுவாசலெண்விரலிரண்டுவுதிக்குமந்திரங்
கோலியொன்றமைந்துமாய்க்குளிர்ந்தலர்ந்துநின்றதீ
மேலுபவேறுநாடிலேவிளைந்ததேசிவாயமே. உ௬

மூன்றுமண்டலத்துளேமுட்டிநின்றதூணிலே
நான்றபாம்பின்வாயிலேநுவுநின்றதீபமா
யீன்றதாயுமப்பனுமெடுத்துரைத்தமந்திரந்
தோன்றுமோரெழுத்திலேசொல்லவெங்குமில்லையே. ()

ஐம்பதொன்றிலக்கரம்மடங்கவோரெழுத்துளே
விண்பரந்தமந்திரமும்வேதநான்குமொன்றலோ
வொண்பரந்தமூலனைவைத்தெழுத்துளேமுளைத்ததீ
எங்கலிங்கபீடமாயமர்ந்ததேசிவாயமே. உ௮

வஞ்சகப்பிறப்பினைமனத்துள்ளேதரித்துநீ
ரஞ்செழுத்திலுண்மையையறிகிலாதமாந்தரே
வஞ்சகப்பிறப்பினைவதைத்திடவும்வல்லிரே
லஞ்செழுத்திலுண்மையறிந்துகொள்ளலாகுமே. உ௯

இடங்கள்பண்ணிசுத்திசெய்தெயிட்டபீடமீதிலே
யடங்கநீரும்பூசைசெய்கருந்தவங்கள்பண்ணுவீர்
ஒடுங்குகின்றநாதகாருருக்கிக்கஞானமெவ்விம
படங்குகின்றதெவ்விடமறிந்துபூசைசெய்யுமே. ௩0

அட்சரம்மனாதியோ ஆத்துமம்மனாதியோ
புக்கிருந்தபூதமும்புலன்களுமனாதியோ
தத்துவங்களாதியோசதாசிவமனாதியோ
தக்கமிக்கநூல்களும்சாஸ்திரம்மனாதியேச
மிக்கிருந்தஞானிகாள்விரித்துரைத்தல்வேண்டுமே. ௩௧

அட்சரமனாதியல்லஅத்துமம்மனாதியல்ல
புக்கிருந்தபூதமும்புலன்களுமனாதியல்ல
தக்கமிக்கநூல்களும்சாஸ்திரம்மனாதியல்ல
வொக்கநின்றுடலகலந்தவுண்மைகாணனாதியே. ௩௨

புத்தகங்களைச்சுமந்துபொய்களைப்பிதற்றுவீர்
செத்திடம்பிறந்திடமதேதுவென்றறிகிலீர்
அத்தனைபசித்தனையறிந்துநோக்கவல்லிரேல்
லுத்தமத்துளாயசோதியுணருமியோகமாகுமே. ௩௩

நாலுவேதமோதுவீர்ஞாலமென்றசொல்லுவீர்
பாலிலேறுநெய்கலந்தபான்மையறிகிரோ
காலமுண்டகண்டனும்மகத்துளேயிருக்கையிற்
காலனென்றசொல்லுவீர்கனவிலுமங்கில்லையே. ௩௪

சாதியாவதேதடாசலந்திரண்டநீரலோ
போதவாசமொன்றலோபூதமைந்துமொன்றலோ
ஓதுமவேதகீதமும்முழுக்கமொன்றலோ
சாதிபாவமெனபேதுசாவுவாழ்வதிண்ணமே. ௩௫

அருளிலேபிறந்திருந்துமானரூபமாகியே
யிருளிலேமயங்குகின்றவேழைமாந்தர்கேண்மினோ
பொருளிலேதவப்புனைந்துபோந்துநோக்கவல்லிரேல்
மருவலேதுவன்னியினமறந்ததேசிவாயமே. ௩௬

கருக்கலந்தகாலமேகண்டிருக்ககாரணா
வுருக்கலந்தபோதலோவுன்னைநானறிந்தினன்
திருக்கலந்தசோதியைத்தெளிந்துநானறிந்தபின்
னிருக்கிலேனிறக்கிலேனிரண்டுமற்றிருந்ததே. ௩௭

மவுனமானவைந்தெழுத்தைவாசியேறிமெல்லவே
வானெலாநிறைந்தசோதிமண்டலம்புகுந்தபின்
அவனுநானுமெய்கலந்தேயனுபவிக்குமளவிலே
புவனமுண்டுபோனுமில்லையாருமில்லையானதே. ௩௮

கைவிடங்கள்கொண்டுநீவிர்கண்டுமீட்டிருக்கிறீர்
செவ்விடங்கள்கொண்டுநீவிரென்றுமேசெபிக்கிறீர்
பொய்படங்ககண்டரைப்பெருங்கிநோக்கவல்லிரேல்
மையமர்ந்தகண்டரோடுமருவிவாழலாகுமே. ௪௰

சுருக்கிநால்முறுக்கியிட்டுப்பன்சையோதவஞ்சர்காள்
துறுக்கநான்முறுக்கியிட்டுத்தாண்டிபோறவல்லிரேற்
கருக்கிலேநுழையுங்கழன்றுகாலபஞ்ஞலையும்மாகாறு [பே
னெருக்கிநூல்தலைப்படும்மி தாணமைவுண்மையுண்மை

தன்மசிந்தையாளவுந்தவமறியாத்தன்மையாய்க்
கன்மசிந்தைவெயிலுழன்றுகருத்தழிந்தகசடரே
ஜென்மஜென்மந்தேடியுங்கெளியனாகுசெல்வனை
நன்மையாகவுமமுளேநயந்துகாணவேண்டுமே. ௪௧

வானிலாததொன்றுமில்லைவானுமில்லையொன்றிடி
லூனிலாததொன்றுமில்லையூனுமில்லையுன்னிடில்
நானிலாததொன்றுமில்லைநானுமில்லைநண்ணிடில்
தானிலாததொன்றுமில்லைதயங்கியாடுகின்றதே. ௪௨

கள்ளமுள்ளமேயிருக்கக்கட்டஞானமோதவீர்
உள்ளமுள்ளறத்தகப்போதுகதியின்றிக்காண்கிலீ
ருள்ளமெய்விளக்கிவித்தமொளியனாகவல்லிரேற்
றெள்ளுநீருமம்முளேசிறந்ததேசிவாயமே. ௪௩

காணவேண்டுமென்றுநீர்கடன்மலைகளேறுவீர்
ஆணம்மகல்லவோவறிவிலாதமாந்தரே
வேணுமென்றவீசர்பாகமெய்யுளேகரிப்பிரேற்
றூணுவாகநின்றசிவன்றான்சிவமதாகுமே. ௪௪

அணுவினோடகண்டமாயளவிடாதசோதியைக்
குணமதாகவும்முளேகுறித்துநோக்கின்முத்தியாம்
மிணமிதென்றுவிரலையெண்ணிமீளொணாமயக்கமாய்த்
துணிவிலாதபடியினாற்றொடர்ந்துபூசைசெய்குவீர். ௪௫

எச்சிலெச்சிலென்றுநீரிடத்திருக்குமேழைகாள்
துச்சிலெச்சிலல்லவோதூயகாயமானதும்
வைத்தவெச்சில்தேனலோவண்டினெச்சில்பூவலோ
கைச்சுதாவில்வைத்துடன்கறந்தபாலுமெச்சிலே. ௪௬

தீர்த்தலிங்கமூர்த்தியென்றுதேடியோடுந்தீதரே
தீர்த்தலிங்கமுள்ளநின்றசீவனைத்தெளியுமோ
தீர்த்தலிங்கமும்முளேதெளிந்துகாணவல்லிரேற்
தீர்த்தலிங்கந்தானதாய்ச்சிறந்ததேசிவாயமே. ௪௭

ஆடுகொண்டுகூடுசெய்தமர்ந்திருக்கும்வாறுபோற்
றேடுகின்றசெம்பினைத்திடப்படப்பரப்பியே
நாடுகின்றதம்பிரானுநம்முளேயிருக்கவே
போடுபத்திரபூசையென்னபூசையென்னபூசையே. ௪௮

அன்னைகற்பகோளறைக்குளக்கினிப்பிரகாசமா
யவ்வறைக்குள்வெந்திடாதவற்பளிக்துரூபமாய்த்
தன்னையொக்குமென்றபோது தடையறக்துவெளியதாய்
தகுதிநல்லபெருமைதந்துதலைவளுவளர்த்ததே. ௪௯

என்னையற்பநேரமுமறக்கிலாதநாயனே
யேகனேயிறைவனேயிராசராசராசனே
யுன்னையற்பநேரமுமொழிந்திருக்கலாகுமோ
வுனதுநாட்டமெனதுநாவிலுதவிசெய்வாயீசனே. ௫௦

எல்லையற்றுநின்றசோதியேகமாவெளிக்கவே
யெல்லைபூரணப்பிரகாசரேகபோகமாகியே
நல்லவின்பமவுனசாகரத்திலேயழுத்தியே
நாடொணாதவமிர்தமுணவுநானழிந்துநிறைந்ததா. ௫௧

யல்லிறந்துட்கவிர்ந்ததீதமும்பிறந்துபோ
யண்டரண்டமுங்கடந்தனேகனேகரூபமாய்ச்
சொல்லிறந்துபொருளிறந்தசுகசொரூபவெளியிலே
சொல்லியாரவெண்ணில்வேறுதுணைகளாகவில்லையே. ( )

ஆனவாறதாயிடுமகண்டமானசோதியை
யூனைநாட்டியும்முளேயுகந்துகாணவல்லிரோ
வூனகாயமாளவர்க்குமுலகபாரமாளலாம
வானநாடுமாளலாம்வானநாடரானையே. ௫௩

இட்டகுண்டமேதடா வெளிவளர்ப்பதேதடா
சுட்டமட்கலத்திலே சுற்றுநூல்களேதடா
முட்டிநின்றதூணிலே முளைத்தெழுந்தசோதியைப்
பற்றிநின்றதேதடா பட்டநாதபட்டரே. ௫௪

நித்தமும்மணிதுலக்கி மூலைபுக்கிருந்து
கத்தியேகதறியே கண்கள்மூடியென்பயன்
எத்தனைபேரெண்ணினும் மட்டிரண்டுபத்தலோ
சுத்தனுக்கிதுக்குமோ அறிவிலாதமாந்தரே. ௫௫

பாங்கினோடுபத்மாசனத்திருந்துபார்த்தநீன்
ஓங்கிடும்மயிருந்தேவுச்சரிக்குமந்திரம்
மூங்கில்வெட்டிநாருரித்து மூச்சசையொட்டியுண்டுநா
ளாயந்தநூலிலேதுனாமும்மையறிந்துணர்ந்துகொண்மினே. ௫௬

அருக்கனோடுசோமனும் மதற்குமப்புறத்திலும்
நெருக்கியேயுதாரமாய் நெருங்குமோரகத்திலே
பரப்பிலாதவெளியிலே பரத்தைநாடியூடுபோ
யிருக்கவல்லவர்களோ வினிப்பிறப்பதில்லையே. ௫௭

ஆவதும்பரத்துளே யழிவதும்பரத்துளே
போவதும்பரத்துளே புகுவதும்பரத்துளே
தேவரும்பரத்துளே திசைகளும்பரத்துளே
யாவரும்பரத்துளே யானும்பரத்துளே. ௫௮

எட்டிரண்டுங்கூடியேலிங்கமானதேவனை
மட்டதாகவுண் மூளைதனித்துநோக்கவல்லிரேற்
கட்டமானபிறவியெனுங்கருக்கடல்கடக்கலா
மிட்டமானவெளியிலேயொடிசைந்திருப்பீர்காண்மினே. ௯

உண்மையானமந்திரம்மொளியிலேயிருந்திடும்
தண்மையானமந்திரஞ்சமைந்தரூபமாகியே
வெண்மையானமந்திரம்விளைந்துநீரதானதே
புண்மையானமந்திரமதொன்றுமேசிவாயமே. ௧௰

பன்னிரண்டுகாலிறுத்திப்பஞ்சவண்ணமொத்திட
மின்னியவ்வெளிக்குணின்றுமேலெடுத்தமர்ந்தது
சென்னியாந்தலத்திலேசிவனிறைந்தியங்கிடு
மன்னியுன்னிலாயமந்தவற்பரப்பிரம்மமாவதே. ௧௧

நச்சுவாயிலுச்சிமேலாயிரத்தலங்களாய்
முச்சுடருமூவிரண்டுமூண்டெழுந்ததீச்சுடர்
வச்சிரமதாகியேவளர்ந்துநின்றதெவ்விடம்
இச்சுடருமிந்திரியமுமேகமானதெக்கணே. ௧௨

எளிதினைக்காணலாகுமெம்பிரானிருப்பிடம்
அழிவிலாதுநின்றதேஅகாரமுமுகாரமும்
குளிகையானசோதியுங்குளாவிநின்றதவ்விடம்
வெளியதாகுமொன்றிலேவிளைந்ததேசிவாயமே. ௧௩

ஆதியந்தமூலவிந்துநாதமைந்தெழுத்துமாய்
ஆதியந்தமூலவிந்துநாதமைந்துபூதமாய்
ஆதியந்தமூலவிந்துநாதமேவிநின்றதே
ஆதியந்தமூலவிந்துநாதமேசிவாயமே. ௬௪

மூன்றிரண்டுமைந்துமாய்முயன்றெழுந்ததேவராய்
மூன்றிரண்டுமைந்ததாய்முயன்றதேயுலகெலா
மீன்றதாயுமப்பனுமியங்குகின்றநாதமுந்
தோன்றுமோரெழுத்தினுட்சொல்லவேறுமில்லையே ()

அக்கரந்தவக்கரத்தினுட்கரந்தவக்கரஞ்
சக்கரத்துசவ்வையுண்டுசம்புளத்திருந்ததீ
யெக்கரந்தயெண்ணைபோல்வெவ்வெழுத்துமெய்ப்பிரா
னுட்கரந்துநின்றநேர்மையாவர்காணவல்லரே ௬௬

மெட்டெழுத்தின்வட்டமேநிறைந்தபல்லியோனியும்
மெட்டெழுத்தின்வட்டமன்றிநின்றதொன்றுகண்டிலே
னெட்டெழுந்திரண்டுமேலிங்கமாகுமாதலா
னெட்டெழுத்தின்வட்டமன்றிநேர்படாததீசனே. ௬௭

அரியுமாகியயனுமாகியண்டமெண்டிசையுமாய்ப்
பெரியனாகியுலகினிற்பெயர்ந்தபாதமொன்றலோ
வுருவுகண்டுவேறுசெய்துவேடமிட்டமூடரே
யுருவின்மூன்றுதேவர்களுமொன்றதாகுமுண்மையே ()

முத்திசித்தி தொந்தமாய் முயங்குகின்ற மூர்த்தியை மற்றதித்த வைம்புலன்க ளாகுமத்திமப்புலன் அத்தர்பித்தர்காளகண்ட ரன்பினாலனுதினமுச்சரித்துளத்திலே யறிந்துணர்ந்துகொண்மினே. சுசு

சுக்கிலத்துளியுளே சுரோணிதக்கருவுளே முச்சுதாவாசலின் மூலைத்தெழுந்தமோட்டினின் பெச்சுதாமெய்யுள்ளே விளங்குஞானதீபமா யுச்சரித்தமந்திரமதொன்றுமேசிவாயமே. எ௦

வேறுமென்றுஞானமும் விரும்புகின்றநாவிலே நானுவுடங்கென்றீர் தரிகிலீர்மறக்கிறீர் தானுவென்றமூலமாடி தன்னுநாடியும்மிளே காணுமன்றி வேறியாவுங்காண்மயக்கமொக்குமே. எக

வழக்கிலேயுரைக்கிறீர் மனத்துளேதவிக்கிறீர் முழக்கிலாதுநாழியானவாறுபோலும்மும்மைகாள் உழக்குமாறுதாழியானவாறு போலும் மும்முளேவழக்கிலேயுரைக்கிணீர் மனத்துளீகன்மன்னுமே. எஉ

உதித்தெழுந்த தெவ்விட மொடுங்குகின்ற தெவ்விடம் மதித்தஞானமெவ்விடம் மடங்குகின்ற தெவ்விடங் கதித்தசிவனெவ்விடங்கண்ணுறக்கமெவ்விடம் விதிக்கவல்லஞானிகாள் விரித்துரைக்கவேண்டுமே. எங

அண்ணலாயநாதியா யநாதிமுன்னநாதியாய்ப் பெண்
ணுமாணுமொன்றலோ பிறப்பதாகுமுன்னெலாங்கண்ணி
வாணிசுக்கிலங் கருத்தொடுங்கிநின்றபின் மண்ணுளோ
ரும்விண்ணுளோரும்வந்தவாறதெங்ஙனே. எச

நினைப்பதொன்றுங் கண்டிலேனீயலாதுவேறிலைநினை
ப்புமாய்மறப்புமாகி நின்றமாய்கையேயனைத்து மாயகண்
டாநாதிமுன்னநாதியர் முனக்கு நானெனக்குநீ நினைக்
கும்வாறதெங்ஙனே. எரு

அணுப்பிறந்தகண்டமாயகன்றவன்யோநியாம் மனு
ப்பிறந்துசெய்துவைத்த நூலினால்மயக்குவீர் சனுப்பதே
துசாவதேது தாவரத்திலுப்பொரு ளினைப்பதேது நிற்
பதேது நீருணர்ந்து கூறுமே. எசு

எத்திசைக்குமெவ்வுயிர்க்கு மெங்களப்பனெம்பிரான்
முத்திஞானவித்துளே முளைத்தெழுந்தசெஞ்சுடர் எத்
திருட்டெளிந்தபோது தேவர்கோயிர்சேர்த்தன்னத்தனு
டல்கண்டபோதடங்கிபாடலுற்றதே. எஎ

அங்கலிங்கபீடமும் மகவைமூன்றெழுத்திலுஞ் சங்
குசக்கரத்திலுஞ்சரித்த வெண்காரத்திலுஞ் சங்குகொண்
டசோதியும் பரந்தவாயுவைந்திலுஞ் சிங்காதவினையுஞ்
சிவாயமல்லதில்லையே. எஅ

நீள்விடுகட்டுவீர் நெடுங்கதவுசாத்துவீர் வாழவேனு
மென்றலோ மகிழ்ந்திருக்குமாந்தரே காலனோலை வந்த
போது கைகலந்துநின்றிடும் ஆலமுண்டகண்டராணைய
மமையாணையுண்மையே. ௭௯

வீடெடுத்துவேள்விசெய்து மெய்யினோடு பொய்யுமா
மாடுமக்கள் பெண்டிர்சுற்ற மென்றிருக்கு மாந்தர்காளோ
டுபெற்ற நம்பர்கையிலோலைவந் தழைத்தபோ காடுபெற்
றவிலையாதும் பெறுதகாணவ்வுடலமே. ௮0

ஓடமுள்ளபோதெலாமோடியே யுலாவலாம் ஓடமுள்
ளபோதெலா முறுதிபண்ணிக்கொள்ளலாம் ஓடமும்மு
டைந்தபோ தொப்பிலாத வெளியிலேயா டுமில்லைகோலு
மில்லை யாருமில்லையானதே. ௮௧

வல்லவாசலொன்பதும் மறுத்தடைக்க வாசலுங்கொ
ல்லும்வாசலோரைந்துஞ் சொல்லவிம்மி நிறைதும் நல்
லவாசலைத்திறந்து ஞானவாசலூடுபோ யெல்லைவாசல்க
ண்டபின் னினிப்பிறப்பதில்லையே. ௮௨

ஆதியானதொன்றுமேய நேகரூபமாயமாய்ச் சாதிபே
தமாயெழுந்து சர்வசீவனானபின் ஆதியோடுகூடிமீண்டெ
ழுந்துசன்மமானபின் (சாதியான ஞானியாருஞ் சந்தமா
யிருப்பாரே. ௮௩

மலர்ந்ததாதுமூலமாகிவையகம் மலர்ந்ததும் மலர்ந்த பூ குவிந்தபோதுமயக்கம்வந் தடுத்ததும் புலன்களொந்து பொறிகலங்கிப் பூமிமேல்விழுந்ததும் இனங்கலங்கிநின்ற பாய மெய்ம்மையாயமீசனே. அச

வண்டுபூமணங்களோடிலங்கிருந்த தேனலாம் உண்டு ளே யடங்கும்வண்ணமேமாதிலிங்க மூலமாய்க்கண்டுகண் டுவேறிலே கருக்கொடுங்கவல்லிரேல் பண்டுகொண்டவ ல்வினைபறந்திடுஞ்சிவாயமே. அரு

ஓரெழுத்துலிங்கமாகவோதுமக்கரத்துளே, வோரெ ழுத்தியங்குகின்ற வுண்மையையறிகிலீர், மூவெழுத்து மூவராய் முளைத்தெழுங்கசோதியை, நாவெழுத்து நாவு ளே நவின்றதேசிவாயமே. அசா

தூரதூரதூரமுந்தொடர்ந்தெழுந்ததூரமும்,பாரபாரபா ரமென்று பரிந்திருந்தபாவிகாள், நேரநேரநேரமுநினைந் திருக்கவல்லிரேல், தூரதூரதூரமுந் தொடர்ந்துகூட லாகுமே. அஎ

குண்டலங்கள்பூண்டுநீர்குளங்கடோறுமூழ்கிநீர், மண் டூகங்கள்போலநீர் மனத்தின்மாசறுக்கிலீர், மண்டை யேந்துகையரை மனத்திலேநினைக்கபோது, பண்டை மாலயன்றொழப் பணிந்துவாழலாகுமே அஅ

நாடி நாடிநாதனைநயந்துபாருமும்முளே,யோடியோ
டிமீளுவா ரரையும்முட்டள்யடக்கலீர், கேடிமேவுகாலனுஜி
னைத்துநின்றுபோய்விடுங், கோடிகோடிகாலமும்முறை
விலாதிருப்பீரே. அ௯

சொய்யநீடுசெய்கிள்நீடுசேர்க்காரணங்கள்போ, ஐ
யமென்று சொல்லியேயனுகியாகிநின்றான், ஐயன்வந்தே
யென்னுளம்புகுந்துகோயில்கொண்டனன்,வையகத்துமா
ந்தர்முன்னேவாய்திறப்பதில்லையே. ௯௰

பூதிபூசையென்றுநீவிர் பூசைசெய்யும்மேதைகாள்,
வாதிபூசையென்றுநீவிர் பூசைகொண்டதெவ்விடம், ஆ
சைகொண்டகோவநாதி பூசைகொண்டதோ, எதுபூசை
கொண்டதோவினைதென்றிபப்புர். ௯௧

கூ கெட்டிமுட்டையிட்டுக்கொண்டிருந்தவாறுபோ
லாதிரண்டுகண்டறைதியிறவம்பலத்துளங்கே, மறிகொண்
டுவெண்ணெயுண்ணவி மாணிக்கடப்கினை, விடுகண்டு
கொண்டவினைபு வெட்டவெளிகாமே. ௯௨

உடம்புயிரெடுத்ததோ வுயிருடம்பெடுத்ததோ,வுட
ம்புயிரெடுத்தபோது [illegible] டம், உடம்பிறந்து
போய்விடும்போதுயிர் [illegible] உடம்புமெய்யறந்ததனே
உண்மைஞானி [illegible] ௯௩

உள்ளதோ பிறப்பதோ வுயிர்ப்படங்கி நின்றிடும், மெ
ள்ளவந்து குட்டநின்ற வினைவரீ வண்டுமெனமறீ, ருள்ளதும்
பிறப்பதுமொன்றுபோதுவாதமாய், கள்ளவாசலைத் திறந்
துகாணவேண்டுமந்தரே. ௬௪

உயிரிருந்த தெவ்விடம் முடம்பெடுப்பதன்முனம்,
முயிரதாவதேதடா வுடம்பதாவதேதடா, உயிரையும்
முடம்பையும் மொன்றுவிப்பதேதடா, வுயிரனாலுடம்பெ
டுத்த வுண்மைஞானிசொல்லடா. ௬௫

உயிர்பரத்தினின்றிடு முடம்பெடுப்பதன்முனம், உ
யிரகாரமாயிருந் துடம்பகாரமாயிடும், உயிரைமுடம்
மையும் மொன்றுவிப்பதச்சிவம், உயிரினாலுடம்பெடுத்த
தொந்தவாறு காணுமே. ௬௬

இல்லையைக் கடந்துநின்ற தெண்டவிட்ட வாயுவை,
வெல்லையுங் கடந்துபோயிருப்பதும் மறிவிரோ, இல்லை
யைக்கடந்துநின்ற வேதமேக வெளியிலே, வெள்ளையுஞ்
சிகப்புமாகி மெய்கலந்து நின்றதே. ௬௭

உருவுமல்ல வொளியுமல்ல வொன்றதல்ல விரண்டதல்ல,
பெரியதல்ல சிறியதல்ல பேசலாவதொன்றதல்ல, மருவு
வாசியுற்றகந்த மத்தியுற்றதல்ல, தரியதாகி நின்றநேர்க்
கை யாவர்காணவல்லரே. ௬௮

மந்திரங்கள்கற்றுநீர் மயங்குகின்றமாந்தரே, மந்திரங்கள்கற்றுநீர் மரித்தபோதுசொல்வீரோ, மந்திரங்களுமுளே மதிக்கநீருமுமுளே, மந்திரங்களாவதும்மனத்திலைந்தெழுத்துமே. ௯௯

சங்கிரண்டுதாரையொன்று சன்னபின்னலானதும், மங்கிமாண்டுலகெலாம் மாண்டலைந்துபோனதுஞ், சங்கிரண்டையுந்திறந்து தாரையூதவல்லிரேல், கொங்கைமங்கைபாகனோடு கூடிவாழலாகுமே. ௱

எங்குமுள்ளவீசனை யெம்முடற்குந்தமின், பங்குகூறுபேசுவார் பாடுசென்றணுகிலார், எங்கள்தெய்வமுங்கள்தெய்வமென்றுபேசுமுள்ளதோ, வுங்கள்பேதமன்றியுண்மைபேதமில்லையே. ௱௧

சிவவாக்கியம்

திருச்சிற்றம்பல

முற்றிற்று.

